www.padippakam.com

# வசிப்பதற்கு எனக்கு ஒரு இடம் வேண்டும்

## மகளிருக்கான ஒரு தன்னியக்க வழிகாட்டி

ஸ்காபுரோ
மகளிர்
நிலையம்

TAMIL: I NEED A PLACE TO LIVE - A SELF-HELP GUIDE FOR WOMEN

படிப்பகம்

www.padippakam.com

## உள்ளடக்கம்

3......... வசிப்பிடத் தேவைகள் நிறைவுபெறா நிலை
3......... வசிப்பிடம் – ஒரு அடிப்படை மனித உரிமை
3......... உங்கள் தேவையை அனுமானித்தல்
6......... உங்கள் தேவையைத் தெரிதல்
6...........மகளிர் புகலிடங்கள்
8......... குடும்பப் புகலிடங்கள்
9......... கடின நிலைக்குட்பட்ட தனியே வசிக்கும் கர்ப்பவதிகள்
அல்லது இளம் மகளிருக்கான இல்லங்கள்
10........ குடும்பங்களும் தனிநபர்களும்
11......... கூட்டுறவு
1௨........ முதியோர் வீடமைப்பு
1௨....... சுதேசிகள் மட்டும்
13........ மகளிர் மட்டும்
13........ இல்லத்தைப் பகிர்தல்
14........ திறந்த வியாபாரம்
16........ ஆரம்பிப்பது எப்படி
17........ உங்கள் உரிமைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்
18....... சட்ட ஆலோசனை
19....... தொல்லைகளின் ஆரம்பம்
– மொழிப்பிரச்சனை
– உங்கள் பிள்ளைகளும் வீடற்றறநிலையும்
௨0...... முடிவுரை

## வசிப்பிடத் தேவைகள் நிறைவுபெறா நிலை

வசிப்பிடத் தேவைகளின் நிறைவு பெறா நிலையை அறிந்ததினால் நீங்களும் இச்சிறு நூலை வாசிக்கிறீர்கள்.

ரொரொன்ரோ நகர (மெற்றோ)ப்பகுதியில் வசிப்பிடத் தேவைகளின் நிறைவுபெறா நிலை, மிகவும் பாதிப்பதாயுள்ளது, நிவாரணமும் விரைவில் கிடைக்கக் கூடிய சாத்தியங்களில்லை. தேவைக்கேற்றவிதத்தில் வதிவிட வசதிகளமையாது, வாடகைக் குடியிருப்புக்கள் உருவாக்கம் சிற்சிலவாயமைவதே இதற்குக் காரணியாகிறது. அதாவது காலி இடங்கள் **0.1% (1000** பகுதிகளுக்கு ஒரு காலி இடம்)

இந்தப் பாதிப்பான நிலை அதிகமாக தனித்துவிட்ட, பிள்ளைகளுடன் உள்ள பெண்களையும், பெரும்பான்மையாக குறைந்த ஊதியம் பெறும் பெண்களையும், குறிப்பாக குறைந்த ஊதிய உழைப்பையே நம்பிவாழும் சகலரையும் இக்கட்டான நிலைக்குத் தள்ளுகிறது. அநேகர் வாடகைசெலுத்த முடியாதவராகிறார்கள். இதனால் குறைந்த ஊதியம் பெறுவோரில் வதிவிடமற்ற நிலை கூடிக் கொண்டே போகிறது.

இச்சிறு நூலானது ஸ்காபுரோவில் கிடைக்கக்கூடிய எல்லா வீட்டு வசதிகளையும் உங்கள் தேவைக்கேற்ப,அறிந்து நன்மை பெற வேண்டும் என்னும் நோக்கத்தால் வெளியிடப்படுகிறது

## வசிப்பிடம் – அடிப்படை மனித உரிமையில் ஒன்று

வசிப்பிடம் ஒன்றினை ஸ்காபுரோவில் தேடிக்காண்பது சுலபமானதல்ல. இக்காரணமே கிடைப்பதைக் கொண்டு திருப்தி அடையும் எண்ணத்தை வளர்த்து உங்களுடைய தேவைக்குகந்தவோர் வசிப்பிடத்தைத் தேடும் முயற்சியை ஸ்தம்பிக்கச் செய்கிறது. உங்களுக்குகந்தவோர் வசிப்பிடம் தேடுவது உங்கள் உரிமை. அத்துடன் உங்களுடைய தேவைக்குகந்த சரியான வசிப்பிடத்தைத்தேடி அடையும்போது, பட்ட கஸ்டங்களின் பலனையே அடைந்தவராவீர்கள் என்பதிரண்டும் என்றுமே உங்கள் நினைவிலிருக்கட்டும்.

## உங்கள் தேவையை அனுமானித்தல்

உங்கள் தேவைகள் உங்கள் நிலையைப் பொறுத்து வித்தியாசப்படும். குறுகிய கால அல்லது நெடுங்கால நிவர்த்திகளை நீங்கள் ஆராயமுடியும். குறுகிய கால வீடமைப்புகள் உங்களை மிகக் கடினமான நிலையிலிருந்து உடனடியாக மீட்பதற்காக அமைக்கப்பட்டுள்ளன. நெடுங்கால வீடமைப்பு நிவாரணத்தில், வாடகை மானியத்திற்கு விண்ணப்பித்தல், முதியோர் நிலையத்தில் ஓர் இடம் தேடிக் கொள்ளுதல், அல்லது திறந்த வியாபாரத்தில், நிதிவசதிக்கேற்ப வசிப்பிடம் தேடிக்கொள்ளுதல், என்பவை அடங்கும்.

ஒன்டாரியோ அரசாங்கத்தின் ஆதரவை பிரஜாவுரிமை மந்திரி இலாக்காவின் மூலம் பெற்றுக் கொண்டதை அறிவிக்கின்றோம். இந்த திட்டம், "நகர சமூக சேவை", "ரொரொன்ரோ நகர சமூக ஸ்தாபனம்" ஆகியோரிடமிருந்து பொருளாதார ஆதரவைப் பெற்றுக் கொண்டது

www.padippakam.com

புதிய வீடமைப்பு தேடுவதற்கான காரணங்களை ஆராயுங்கள்

பாதுகாப்பு

வீசேடத் தேவைகள்

- சரீரப் பாதிப்பு உங்களுக்கு ஏற்படுகிதா? உங்களுக்கு அல்லது உங்கள் பிள்ளைகளுக்கு சரீர அபாயம் ஏற்படுமா?
- நீங்கள் தெருவில் வசிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதா?
- நீங்கள் இப்போது வசிக்கும் வீடு பழுதடைந்து, பாதுகாப்பற்றதாக உள்ளதா?

நீங்கள் தங்குமிடம் எக்காரணத்திலாவது பாதுகாப்பற்றதாக உள்ளதா?

உடனடியாக வெளியேறுங்கள்

- குறுகிய கால வீடமைப்புகளை ஆராயுங்கள்
- பாதுகாப்புள்ள இடத்தை அடைந்தபின் நீண்டகால வீடமைப்புகளை ஆராயுங்கள்

உங்களுக்கு உதவக்கூடிய வீடுதிகள், புகலிடங்கள் 6ம், 7ம் பக்கங்களில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன

- நீங்கள், உதவக்கூடிய சூழ்நிலையை நாடும், கருவுற்றிருக்கும் தனியே வசிக்கும் பெண்ணா?

கடின நிலையிலிருக்கும் பெண்களுக்குதவும் வசிப்பிடங்களின் பட்டியலுக்கு பக்கம் 8ைப் பார்க்கவும்

- நீங்கள் குறைந்த வருவாயில் ஒரு குடும்பத்தைப் பராமரிக்கும் சுதேசியா?

சுதேசிகள் மட்டும் குடியிருப்புகள், விண்ணப்பிக்கும் முறைகள் என்பனவற்றிற்கு பக்கம் 10 – 13 பார்க்கவும்

- நீங்கள் குறிப்பிட்ட வருவாயில் வசிக்கும் முதியவரா?

முதியோர் மத்திய வீடமைப்பு பதிவகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். விபரங்களுக்கு பக்கம் 12ைப் பார்க்கவும்

பணம்

- நீங்கள் வாடகைப்பணம் செலுத்தாதலால் வெளியேற்றப் படுகிறீர்களா? (கீழே இடது பக்கம் பார்க்கவும்)
- உங்கள் வாடகை உங்கள் வருமானத்தில் 25 – 30 % க்கு மேல் வருகின்றதா?
- உங்கள் குறைந்த வருமானத்தால் நீங்கள் வசதியற்ற, நெருக்கம் கூடிய வீடமைப்பில் வசிக்க நேரிடுகிறதா?

  நீங்கள் தனியே குறைந்த வருமானத்தில் வசிக்கும் பெற்றோரா?

திறந்த வியாபார வீடமைப்புகள் உங்கள் வருமானத்திற்கு மேலதிகமா?

- நெடுங்கால நிவாரணத்தை ஆராயுங்கள்

வாடகை மானியம் பெறும் வீடமைப்புகளை ஆராயுங்கள். உங்களுக்கு கிடைக்கக் கூடிய மாற்றுகளுக்கும் விண்ணப்பிக்கும் முறைகளுக்கும் பக்கம் 10லிருந்து 13 வரை பார்க்கவும்.

வீட்டைப் பகிர்தல், வரையறுக்கப்படாத கூட்டுறவு போன்ற மாற்று நிவாரணங்களுக்கு பக்கம் 13 – 14ஐப் பார்க்கவும்

அதே நேரம், திறந்த வியாபாரத்தினை எவ்வாறு சிறந்த முறையில் உபயோகிப்பது என்பதனையும் அறியுங்கள். பக்கங்கள் 14லிருந்து 18 வரை பார்க்கவும்

## உங்கள் தேவையைத் தெரிதல்

A. குறுகியகால வீடமைப்புகள்

அநேகமான விடுதிகளும் புகலிடங்களும், மக்களின் தேவைகளுக்கேற்ப, பணமற்ற அவசரகால வீடமைப்புகளாகும். சிலவற்றில் தாக்கப்பட்ட மகளிரும் பிள்ளைகளும் மட்டும் அனுமதிக்கப்படுவர். சிலவற்றில் தாக்கப்பபட்ட தனிமகளிர் மட்டும் அனுமதிக்கப்படுவர். மற்றவை கடின நிலையிலுள்ள குடும்பங்களை அனுமதிப்பர். நீங்கள் தொலை பேசி மூலம் விடுதிகளுடன் தொடர்பு கொண்டு எவர் அனுமதிக்கப்டுவர், தனிப்பட்ட நிபந்தனைகள் யாவை, எவ்வளவு காலம் தங்கமுடியும், என்பனவற்றை அறிந்துகொள்ளுங்கள். மெற்றோ ரொரன்ரோவில் உள்ள விடுதிகள், புகலிடங்கள், ஸ்காபுரோவில் வசிப்போரையும் அனுமதிப்பன. இவற்றில் சில ஸ்காபுரோவிலேயே உள. உங்களுக்கு அல்லது உங்கள் பிள்ளைகளுக்கு, நீங்கள் தற்போது வசிக்கும் இடத்தால் சரீரப் பாதிப்பு ஏற்படுமாயின் அல்லது உங்களுக்கு அல்லது உங்கள் குடும்பத்தினருக்கு வசிப்பிடமற்ற நிலை ஏற்படுமாயின், அல்லது நீங்கள் வசிப்பிடமற்றவராயின் தற்காலிக நிவாரணமாக விடுதிகளையும் புகலிடங்களையும் ஆராயவும்.

**சில:**

### மகளிர் புகலிடங்கள்

எமிலிஸ்ரோவ் மகளிர் புகலிடம்

**21** பிறிம்லி வீதி ஸ்காபரோ ........................................ **264 4357**

பணமற்ற, **24** மணிநேர தாக்கப்பட்ட மகளிர் அவர்களின் பிள்ளைகளுக்கான அவசர கால விடுதி, தொலைபேசியில் முதலில் தொடர்பு கொள்க. பலமொழி சேவை வழங்கப்படும்.

நோத்யோக் மகளிர் புகலிடம்

நோத் யோக் ........................................ **635 9630**

பிள்ளைகள் உள்ள அல்லது அற்ற, தாக்கப்பட்ட மகளிருக்கான, பணமற்ற, **24** மணிநேர அவசரகால புகலிடம். சக்கர நாற்காலிகள் உட்புகக்கூடியவை. பலமொழி சேவை வழங்கப்படும்.

மாறுகைக்குட்பட்ட பெண்கள் சங்கம்

புளூர் இல்லம்

**1322** புளூர் மேற்கு, ரொரொன்ரோ........................................ **533 1175**

ஸ்படைனா இல்லம்

**143** ஸ்படைனா வீதி ரொரொன்ரோ. ........................................ **967 5227**

கடின நிலையிலுள்ள மகளிருக்கான **24** மணநேர பணமற்ற புகலிடம். முதலில் தொலைபேசியில்தொடர்பு கொள்க.

இடைப்பட்ட வீடு(இன்றேவல் கவுஸ்)

**596** குறோன் வீதி ரொரொன்றோ........................................ **924 1491**

பணமற்ற **24** மணிநேர அவசரகால புகலிடம். தாக்கப்பட்ட, பிள்ளைகள் உள்ள மகளிருக்கு முன்னுரிமை வழங்கப்படும். முதலில் தொலைபேசியில் தொடர்பு கொள்க.

www.padippakam.com

றொபேட்சன் வீடு
**291** செபோண் வீதி றொறொன்ரோ ........................................................ **392 5650**
பணமற்ற, குறுகியகால, பிள்ளைகள் உள்ள அல்லது அற்ற மகளிர் புகலிடம். குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் உடனடியாகத் தங்குமிடம் தேவைப்படுபவர்களுக்கும் உரியது. முதலில் தொலைபேசியில் தொடர்பு கொள்க

நெல்லியின் வீடுதி
**275A** புறோடவியூ அவேன்யூ றொறொன்ரோ..................................................... **461 1084**
பணமற்ற, தற்காலிக, பிள்ளைகள் உள்ள, பிள்ளைகள் அற்ற மகளிருக்கான வீடுதி தொலைபேசியில் முதலில் தொடர்பு கொள்க பலமொழி சேவைகள் உண்டு

வுட்லோன் தங்குமிடத்தின் அவசரகால புகலிடம்
**80** வுட்லோன் அவென்யு கிழக்கு றொறொன்ரோ ........................................ **923 8454**
பணமற்ற, **24** மணிநேர, அவசரகால, மகளிருக்கான புகலிடம். அகதிகளுக்கு மேலதிக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. முதலில் தொடர்பு கொள்க

வேறுசில :
ஷேர்லி சமறா வீடு, வெஸ்ரொன்................................................................ **249 7095**
(தாக்கப்பட்ட குடிவரவு மகளிருக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

யெல்லோ பிரிக் வீடு, அரோரா ............................................................. **773 6481**

ஏனெஸ்ட்டைனின் மகளிர் புகலிடம், ரெக்ஸ்டேல்........................................ **746 3701**

றெட்டோர் தாக்கப்பட்ட மகளிர் புகலிடம்
**875**, குவீன் வீதி கிழக்கு, றொறொன்ரோ....................................................... **462 9750**

ஏற்றோபிக்கோக்கின் மகளிர் வாசம்
ஏற்றோபிக்கோக் ........................................................................... **252 5829**
அண்டுகியா ஹவுஸ் தங்குமிட சங்கம் அவசரகாலப் புகலிடம்
**106** ஸ்படைனா றோட் றொறொன்ரோ ........................................................ **920 1492**
(சுதேசிப் பெண்களுக்கு முன்னுரிமை)

கோன்வென்ற் வீடு
**70** ஜெராட் கிழக்கு, றொறொன்ரோ............................................................. **593 4849**

ரெண்டு வீடு
**242** சேர்ச் வீதி, றொறொன்ரோ................................................................. **864 0792**

சல்வேசன் ஆர்மி இவான் ஜெலின் தங்குமிட அவசரகாலப் புகலிடம்
**2808** டண்டஸ் மேற்கு றொறொன்ரோ ......................................................... **762 9636**

ஸ்ரொப் 86
86 மடிசண் அவென்யூ ரொரொன்ரோ ........................................ 922 3271

ஸ்ரீற் ஹெவிண் அற் த குரொஸ்ரோட்ஸ்
87 பெம்புறோக் வீதி ரொரொன்ரோ ........................................ 967 6060

வை. டபிள்யூ.சி.ஏ. புகலிடம்
தபால் பெட்டி 124, ஸ்டேஷன் "எச்" ரொரொன்ரோ ........................693 7342

குடும்பப் புகலிடங்கள்
ஹோம் வேர்ட் குடும்பப் புகலிடம்
தபால் பெட்டி 37529, 31 டப்ஸ்காட் வீதி, ஸ்காபுரோ........................ 724 1316

பணமற்ற அவசரகால வீடமைப்பு. நிதிசார் அல்லது சமூக தேவையுள்ளவர்களுக்காக 1989 கோடையில் திறக்கப்படவிருக்கிறது

வுட்கிரீன் ரெட்டோர் குடும்பப் புகலிடம்
875 குவீன் வீதி கிழக்கு ரொரொன்ரோ ........................................ 469 3457
பணமற்ற அவசரகால, குடும்பங்களுக்கான புகலிடம். அகதிகளாகக்கோரும் குடும்பங்களுக்கும், அரசாங்கம் பொறுப்பேற்ற அல்லது அங்கீகாரம் பெறக் காத்திருக்கும் குடிவரவுக் குடும்பங்களுக்கு உரியது. தொலைபேசியில் முதலில் தொடர்புகொள்க. பல மொழிச் சேவைகள் வழங்கப்படும்.

ரொரொன்ரோ சமூக வீடுதி
25 டன்டாஸ் மேற்கு, ரொரொன்ரோ........................................925 4431
பணமற்ற அவசரகால, தனிநபர் அல்லது குடும்பங்களுக்கான புகலிடம். முதலில் தொடர்பு கொள்க.

மெற்ரோ ரொரொன்ரோ சமூகசேவை இலாகா
குடும்ப தங்குமிடம்
4222 கிங்ஸ்டன் வீதி ஸ்காபரோ ........................................ 397 1318

பணமற்ற அவசரகாலப் புகலிடம். பிள்ளைகளுள்ள குடும்பங்களுக்கும், வீடற்ற தம்பதிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். சக்கர நாற்காலி உபயோகிப்பவர் குடும்ப நபருடன் தங்குவதாயின் அனுமதிக்கபப்டுவர்.

தனிக்கர்ப்பவதிகள் அல்லது கடின நிலையில் உள்ள தனி இளம் மகளிருக்கான இல்லங்கள்
பெதெல் இல்லம்
115 போனிஸ் அவென்யூ ஏஜின்கோர்ட்........................................ 293 2074
15-18 வயது இளம் வீடற்ற மகளிர் அல்லது 14-21 வயது தனிக் கர்ப்பவதிகளுக்கு தங்குமிட சேவைகள் வழங்கப்படும். வேலையற்றவராயின் சேவைகள் இலவசம். வேலை உள்ளவர்கள் வருமானத்தில் 20% கொடுக்க வேண்டும். வாழ்க்கை வல்லமைத் திட்டங்கள் உண்டு.

www.padippakam.com

ரோசாலி ஹால்
**3020** லோரென்ஸ் அவென்யூ கிழக்கு ஸ்காபரோ.................................... **438 6880**
எவ்வயதாயினும் தனிக்கர்ப்பவதிகள், பிள்ளைகளுடன் வசிக்கும் தனித் தாய்கள் அல்லது பிள்ளைகளை விட்டுக் கொடுத்தோர், ஆகியோருக்கான பணமற்ற தங்குமிட சேவைகள் வாழ்க்கை வல்லமை திட்டங்கள் உண்டு

ஆராபண் வீடு
**29** வில்சன் பார்க்றோட் ரொறொன்ரோ ................................................... **536 7037**
சமூக இணக்கம் பிரச்சனை உள்ள **15-17** வயது இளம் மகளிருக்கான ஒரு குடும்ப முறை கூட்டு இல்லம். (இளம் கர்ப்பவதிகளுக்கு இல்லை). சுதந்திரமான வாழ்முறை தூண்டப்படும். உத்தியோகத்தரிடமிருந்து (பாடசாலை உத்தியோகத்தர், போதகர் போன்றோரிடமிருந்து) குறிப்பு முக்கியமாகும். சராசரியாக 6இலிருந்து **10** மாதங்கள் தங்கலாம். பணமற்றது.

மாசி சென்டர்
**1102** பிறோட்வியூ அவென்யூ ரொறொன்ரோ ........................................ **425 6348**
தனிக் கர்ப்பவதிகளுக்குஅல்லது தனியே குழந்தைகளுடன் வசிக்கும் தாய்மார்களுக்கும் தங்குமிட கவனிப்பு. பணம் கட்டக்கூடிய தன்மையைப் பொறுத்து வசூலிக்கப்படும்.

குயூம்வுட் வீட்டு இணைப்புச் சபை
**40** குயூம்வுட் டிளரவ் ரொறொன்ரோ ................................................... **651 5657**
தன்மயமான பிரச்சனைகள் உள்ள அல்லது கர்ப்பமான **14-21** வயது இளம் பெண்களுக்கான பணமற்ற தங்குமிட சேவை. உத்தியோகத்தரிடமிருந்து குறிப்பு விரும்பப்படும்.

சல்வேசன் ஆர்மி பெத்தானி இல்லம் தங்குமிட திட்டம்
**450** பேப் அவென்யூ ரொறொன்ரோ ........................................................ **461 0217**
தனிக்கர்ப்பவதிகளுக்கான தங்குமிட சேவைகள் பேறு காலத்தைத் தொடர்ந்து இரண்டு மாதத்திற்கு குழந்தையுடன் அல்லது குழந்தையின்றித் தங்கலாம். தொலைபேசியில் தொடர்பு கொண்டு முன்னேற்பாடு செய்து கொள்ளவும்.

## B. நீண்ட கால வீடமைப்பு

### வாடகை மானியம்

வாடகை மானியம் பெறும் வீடமைப்பு குறைந்த வருவாய் உள்ள மக்களுக்கானவை. வழமையாக வாடகை உங்கள் முழு குடும்ப வருமானத்தில் **25%**ஆகும். வாடகை மானியம் பெறும் வீடமைப்புகள் உங்களுக்குக் கிடைக்க வேண்டுமெனில் நீங்கள் கனேடியப் பிரசையாகவோ அல்லது அனுமதிக்கப்பட்ட குடிவரவாளராகவோ இருத்தல் வேண்டும்.

அநேகமான (அனைத்துமாக இல்லாவிடினும்) உதவி வீடமைப்புத் திட்டங்கள் பின்வரும் மக்களுக்கு முன்னுரிமை வழங்கும்: பிள்ளைகளுடன் தனியே வசிப்பவர், முதியோர் அல்லது ஊனமுற்றோர்.

### குடும்பங்களும் தனி நபர்களும்

மெற்றோபொலிற்றன் ரொரொன்ரோ குடியருப்பு கட்டளைச் சபை (எம்.ரீ.எச்.ஏ)

**1320** யங் வீதி ரொரொன்ரோ ........................ **969 6010**

அநேகமான மானியம் பெறும் எம்ரீஎச்ஏயின் பகுதிகள் குடும்பங்களுக்கும் தனிநபர்களுக்குமாகும். மெற்றோ ரொரொன்ரோவில் **29000** பகுதிகள் உண்டு. **8000**க்கும் மேலானவை ஸ்காபரோவில் உண்டு. ஆயினும் இவ்விடத்தில் முன்பே வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட மாட்டாது.

விண்ணப்பிப்பதற்கு **928 4810** ஐத் தொடர்பு கொள்க. (தொடர்ந்து முயற்ச்சிக்கவும்) அல்லது விண்ணப்பப்படிவத்திற்காக **1320**யங் வீதிக்குச் செல்லவும். (சென்றக்கிளையர் சப்வேயிலிருந்து சில கட்டடங்கள் தெற்கே யங்கில்)

உங்கள் சமூகக் காப்புறுதி இலக்கம், கனடாவில் நீங்கள் தங்கும் நிலைக்கான அத்தாட்சிகள் என்பனவற்றைக் கொண்டு செல்லவும்.

உங்கள் விண்ணப்பம் ஒரு மாத காலத்திற்குள் பரிசீலிக்கப்படும். உங்களை அதிக முன்னுரிமை உள்ளவராக கணித்தால் எம்.ரி எச்.ஏ உங்கள் வீட்டிலேயே நேர்முகத்தேர்வுக்கு ஒழுங்கு செய்யும். நேர்முகத் தேர்வாளர், உங்கள் முழுக்குடும்ப வருமானம், பிள்ளைகளின் எண்ணிக்கை, தற்போது நீங்கள் கொடுக்கும் வாடகை, நீங்கள் வசிக்கும் இடநிலை, முக்கியமான சுகவீனங்கள் ஏதாவது, கடன் என்பனவற்றைப் பரிசீலிப்பார்.

நேர்முகத்தேர்வாளர் உங்களைக் கணிப்பார். (**0-200**). நீங்கள், உங்கள் கணிப்பைப் பார்வையிட, அதைப்பற்றி அறிந்து கொள்ள முடியும். இந்தக் கணிப்பைப் பொறுத்து எவ்வளவு காலம் நீங்கள் காத்திருக்க வேண்டும் எனத் தெரிவிப்பர். சிலர் சில மாதங்கள் மட்டும் காத்திருக்க வேண்டியிருக்கும். மற்றவர்கள் வருடங்கள் காத்திருக்க நேரிடும்.

### சிட்டி இல்லம்

**20** ஆடலேட் வீதி ரொரொன்ரோ........................ **392 7945**

சிட்டி இல்லம் **6000** பகுதிகளை நிர்வகிக்கின்றது. இதில் **2500** வாடகை மானியம் பெறுபவை. ஸ்காபுரோவில் ஒரு பகுதிகளும் இல்லையெனினும் ஸ்காபுரோவில் வசிப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

வாடகை மானியம் பெறும் பகுதிகள் பற்றி அறிந்து கொள்ள **392-7893** உடன் தொடர்பு கொள்க.

விண்ணப்பப் படிவத்திற்கு **20** அடலேட் வீதிக்குச் செல்க (டண்டாஸ் சப்வேயிலிருந்து பேக்கு ஒரு கட்டடம் மேற்கே)

சராசரி **4** வருடங்கள் காத்திருக்க நேரிடும் எனத் தெரிந்து கொள்க. முதல் வருபவருக்கு முதலிடம் என்ற கொள்கைப்படி பகுதிகள் வாடகைக்கு விடப்படும்.

## சென்ற் கிளையர் ஓ கோணர் சமூக சங்கம்

**2701**சென்ற் கிளையர் அவென்யூ கிழக்கு ரொரொன்ரோ.......................... **757 8757**

வாடகை மானியம் பெறும், ஆண், பெண், தம்பதியர், முதியோர்( **59** அல்லது மேற்பட்ட) ஆகியோருக்கான, சக்கர நாற்காலி வசதியுள்ள பகுதிகள். குடும்ப வருமானத்தில் **25%** வாடகையாகக் கொடுக்க வேண்டும். சராசரி காத்திருக்க வேண்டிய காலம் **5** வருடம்.

## கூட்டு அமைப்புகள்

### ரொரொனரோவின் கூட்டு அமைப்பு வீடமைப்புக் கட்டுப்பாட்டுச் சங்கம்

**22** மோவாட் வீதி அறை **100** ரொரொன்ரோ ........................................... **538 7511**

கூட்டுறவு உறுப்பினர்கள் கூட்டாக அவர்கள் வீடமைப்புகளின் உரிமையாளர்கள். தங்கள் வீடமைப்புகளின் கொள்விலைக்கு தங்களுக்கே குத்தகைக்கு எடுத்துக் கொள்வர். ஒரு வீட்டு உரிமையாளருக்குக் கொடுக்க வேண்டிய பண வீரயமும் இல்லை.

ஒரு கூட்டுறவு ஒரு கூட்டு நிர்வாகம். அதில் வசிப்பவர்கள் கூட்டு நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள். அதை நிர்வகிக்க நிர்வாகிகள் குழுக்கள் தெரிவுசெய்யப்படுவர். அங்கத்தினர் அனைவரும் பங்குகொள்ள வேண்டும்.

ஒவ்வொரு கூட்டுறவும் சில மானியம் பெறும் பகுதிகளைவைத்திருப்பர். அதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமாயின் நீங்கள் அனுமதிக்கப்பட்ட குடிவரவாளராகவோ அல்லது கனேடியப் பிரசையாகவோ, **16** வயதுக்கு மேற்பட்டவராகவும். உங்கள் மாத வருமானத்தில் **25%**க்கு மேற்படியாக உங்கள் வீடமைப்புக்குச் செலவழிக்க வேண்டியுள்ளது எனக் காண்பிக்கக் கூடியவராகவும், இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிப்பதற்கு **538 7511** உடன் தொடர்பு கொண்டு புதுப்பிக்கப்பட்ட பட்டியலைக் கேட்கவும். இப்பட்டியல்கள் எந்தெந்த கூட்டுறவுகள், காத்திருப்பவர்களின் பட்டியலைத் திறக்கின்றது. விபரங்கள் தெரிவிக்கும் கூட்டங்கள் எப்போ போன்றவற்றைக் காண்பிக்கும். நீங்கள் அவற்றைக் காரியாலயத்திலிருந்து அல்லது முத்திரையிட்ட சுய விலாசமிட்ட காகித உறை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். புதுப்பட்டியல்கள் கிட்டத்தட்ட **3** வாரங்களுக்கொரு முறை அச்சிடப்படும்.

சில கூட்டுறவுகள் மிகவும் விரும்பப்படுபவையாதலால் காத்திருக்க வேண்டிய காலம் **2**இலிருந்து **5** வருடங்களாகும்.

### கொன்ஸ்ரன்ஸ் கமில்றன் கூட்டுறவு

**70-A** லம்பேற் லொட்ஜ் அவென்யூ ரொரொன்ரோ ........................................**532 8860**

விண்ணபப்ப் படிவத்தை, முத்திரை இடப்பட்ட சுய விலாசமிட்ட காகித உறை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். **25%** பகுதிகள் வாடகை மானியம் பெறுபவை. தனியே வசிக்கும் மகளிருக்கு முன்னுரிமை வழங்கப்படும். காத்திருக்க வேண்டிய காலம் அநேகமாக **2** வருடங்கள் அல்லது மேலதிகமாகும்.

### ரொரொன்ரோ பெண்கள் கூட்டுறவு

**397** ஷட்டர் வீதி ரொரொன்ரோ............................................................................ **865 1765**

பிள்ளைகள் இல்லாத அல்லது உள்ள **18** வயதுக்கு மேற்பட்ட அனைத்து மகளிருக்குமான கூட்டுறவு. விபரங்கள் அறிவிக்கும் கூட்டங்கள் ஒவ்வொரு மாதத்தின் முதல் வியாழனன்றும் இரவு **7.30** மணிக்கு ஷட்டர் வீதியில் நடைபெறும்.

தாமத கலாம் அநேகமாக ஒரு வருடமாகும்.

லன்ரானா லாபமற்ற இல்ல கூட்டுறவு

**290** ஷட்டர் வீதி ரொரொன்ரோ ............................................**366 3746**

லன்ரானா, கூட்டுறவுகளில் வாழவிரும்புவோர்களையும், அவற்றை உருவாக்குபவர்களையும், ஒன்று சேர்க்கிறது. ஒரு கட்டணத்திற்கு, கூட்டுறவின் பணநிலையை ஒருங்கிணைக்க உதவி, ஆலோசனை வழங்குவர். உதாரணத்திற்கு, ஸ்காபரோ மகளிர் குழுவினர் ஒரு கூட்டுறவு உருவாக்க விரும்பினால் அவர்கள லன்ரானாவிடம் ஆலோசனை கேட்கலாம். கூட்டுறவின் அமைப்பு, அதன் வசதிகள் ஆகியவை மகளிரால் தீர்மானிக்கப்படும். ஸ்காபரோவிலும் மெற்ரோ ரொரொன்ரோ, சுற்றுமுள்ள இடங்களின் விலை அவர்களுகக்குப் பிரச்சனையாகலாம்.
நடைமுறை **3**லிருந்து **5** வருடங்கள் எடுக்கும்.

முதியோர் வீடமைப்பு

மெற்ரோ ரொரொன்ரோ வரையறுக்கப்பட்ட வீடமைப்புச் சங்கம் (எம்.ரி எச் சி எல்)
முதியோர் மத்திய வீடமைப்புப் பதிவகம்

**20** யோக்மில்ஸ் றோட் 2வது மாடி வில்லோடேல் ................................ **392 6111**

**60** வயதுக்கு மேற்பட்ட தம்பதியருக்கும், தனியோருக்கும் எம்.ரி.எச்.சி.எல் தன்னிறைவு பெற்ற குடியிருப்புப் பகுதிகளை வழங்குகிறது. விண்ணப்பிப்பவர்கள் தனியே வசிக்க, தங்ளைத் தாங்களே கவனித்துக் கொள்ள, தங்கள் பகுதிகளைப் பராமரித்துக் கொள்ளக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

லாபமற்ற தனியார் அல்லது மாநகர சபை வீடமைப்புகள், கூட்டுறவுகள் அல்லது ஓ.எச்.சி அல்லது "எம்.ரி.எச்.ஏ" யினால் நடத்தப்படும் குடியிருப்புகள் போன்ற பல்வேறு வீடமைப்புகளுக்கு ஒரு முதியவர், முதியோர் மத்திய வீடமைப்புப் பதிவகத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்கும் முறைகளை அறிய **392 6111** ஐத் தொடர்பு கொள்ளவும் (தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்) அல்லது நேரில் **20** யோக் மில்ஸ் றோட் உவது மாடியிலிருக்கும் காரியாலயத்திற்கு (யோர்க் மில்ஸ் சப்வே நிறுத்தம்) செல்லவும். **8.30** லிருந்து **4.30** வரை திறந்திருக்கும்.

சுதேசிகள் மட்டும்

**4201** கிங்ஸ்ரன்றோட் ஸ்காபரோ ........................................................ **286 5277**

வாடகை மானியம் பெறும் சுதேசிகளுக்கு மட்டும் உரிய வீடமைப்புகள், குடும்ப வருமானத்தில **25%** வாடகையாகும். இப்பகுதிகளனைத்தும் வாடகை மானியம் பெறுபவை. வாடகை மானியம் பெற்ற வீடமைப்புகளில் இதுவரை தங்கியிருக்காத, பெரிய குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். **6** மாதத்திலிருந்து **1** வருடம் வரை காத்திருக்க நேரலாம்.

விண்ணப்பிக்க, தொலைபேசியில் தொடர்பு கொண்டால் விண்ணப்பப் படிவம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

## மகளிர் மட்டும்

### நெல்லியின் வீடமைப்புத் திட்டம்

**229** கொலிஜ் வீதி சூயற் ; **207** றொறொன்ரோ ............................................ **585 2250**

மகளிருக்கான வீடமைப்பு உதவியான இத்திட்டம் மூன்று நிலைகளில் செயல்படும்.
a. முதல்நிலை – பிள்ளைகள் உள்ள அல்லது அற்ற, வீடற்ற மகளிருக்கும், **16** வயதுக்கு மேற்பட்ட இளம் மகளிருக்குமான வீடமைப்புகள்.

b. இரண்டாம்நிலை – ஒரு வருட கால எல்லைக்குட்பட்ட இடைநிலை வீடமைப்புகள், முக்கியமாக புகலிடத்திலிருந்து வரும் மகளிருக்கு, பணவரவுக்குட்பட்ட தங்கும் சூழ்நிலை.

c. மூன்றாம்நிலை – குறைந்த நிலையான வாடகை உள்ள வருவாய்க்குட்பட்ட நிரந்தர வீடமைப்புகள்

இவற்றில் ஒன்றிற்கு விண்ணப்பிக்க வேண்டுமெனில் வெற்றிடங்களைத் தொலைபேசி மூலம் அறிந்து கொள்ளவும். காத்திருப்பவர்களின் பட்டியல் அவர்கள் வைத்திருப்பதில்லை. அதனால் தொடர்ந்து **6** வாரங்களுக்கொருமுறை தொடர்பு கொள்ளவும். வெற்றிடம் வரும்போது விண்ணப்பதாரர் நேர்முகத் தெரிவுக்கு அழைக்கப்படுவர்.

### வை.டபிள்யூ.சீ.ஏ. பெண்கள் இல்லம்

**15** பேப் வீதி றொறொன்ரோ ................................................ **469 0774**

புதிதாக வசிப்பவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமையால் பல வருடங்களுக்கு இடம் கிடைப்பது இயலாதகாரியம்.

## இல்லத்தைப் பகிர்தல்

ஸ்காபரோ வீடமைப்பு உதவி மத்தியிடம்

**49** ஹெவ்ராண் வீதி ஸ்காபரோ................................................................. **285 8070**

எஸ்.எச்.எச்.சி வசிப்பதற்கு ஒரு இடம் தேடுபவர்களுக்கும், தங்கள் இல்லங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புபவர்களுக்கும் உதவி செய்யும் ஒரு நிறுவனமாகும்.

தனியோரும், ஒரு பிள்ளையுள்ள பெற்றோரும் விண்ணப்பிப்பதற்குக்கு தகுதியுள்ளவர்களாவர். விண்ணப்பிப்பவர் ஒரு பதிவு அட்டையை நிரப்ப வேண்டும். எஸ்.எச்.எச்.சி விருப்புகளைப் பொறுத்த முயற்சியாகும்.

ஒரு இல்லத்தைப் பகிர்தல், இரு பகுதியினருக்கும் வீடமைப்பின் செலவைக் குறைக்கும். மற்றும் ஓரளவு நட்புறவினை உருவாக்கும். சராசரி காத்திருக்க வேண்டிய காலம் ஒரு வாரத்திலிருந்து சில மாதங்கள்.

www.padippakam.com

பகிர்தல்

கனடா நல்வாழ்வும் சுகாதாரமும்
**339** புளுர் வீதி மேற்கு சூயிட் **212** ரொரொன்ரோ................................................**591 1657**
மெற்றோ முழுவதிலும் **55** வயதுக்கு மேற்பட்ட (அநேகமாக வயது கூடியமகளிர்) வர்களை ஒரு வீடமைப்பு பங்காளியுடன் பொருத்தும் சேவை, பகிர்தல்.
தனியோரும் பிள்ளைகள் உள்ள தனித்தாய்மாரும் விண்ணப்பிக்கலாம். அனைத்து விண்ணப்ப்தாரரும் தரப்படுத்தலுக்குள்ளாவர்.
**339** புளூர் வீதி மேற்கு சூட் **212** (சென்ற் ஜோர்ஜ் சப்வே நிறுத்தம்) ல் விண்ணப்பிக்கலாம்.

வரைமுறையறுக்கப்படாத கூட்டுறவுகள்
வரைமுறையறுக்கப்படாத கூட்டுறவில் சேருவதற்கு ஒரு நிறுவனம் உங்களுக்குத் தேவையில்லை. ஒரே மாதிரியான விருப்பு வெறுப்புகள் கொண்ட ஒரு குழுவினர் சேர்ந்து வசிக்க விரும்பின் ஒரு வரையறுக்கப்படாத கூட்டுறவாகலாம்.

ஒருவேளை முன்கூட்டியே முக்கிய விடயங்களைக் கலந்தாலோசித்தல் அதிமுக்கியமாகலாம். உங்கள் வாழ்முறை தகுதியானதா? எந்நேரம்வரை விழித்திருப்பீர்கள்? உங்களுக்குப்பிள்ளைகள் இருப்பின் உங்கள் இல்லத்திலிருப்பவர்கள் பிள்ளைகளை வளர்க்கும் முறையை நீங்கள் மதிப்பீர்களா? பிள்ளைப் பராமரிப்பை நீங்கள் பகிர்ந்து கொள்வீர்களா? மற்றவர்கள் தங்கள் வாடகைப் பகுதியையும் மற்றும்செலவுகளையும் கட்டக் கூடியவர்களா? தேர்ந்தெடுத்தல் மிக முக்கியமாகும். மற்றவர்களுடன் வசித்தல் எப்பொழுதும் சுலபமானதல்ல.
குறைந்த வாடகைச் செலவு, பகிரப்பட்ட குடும்பப் பொறுப்புகள், உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் சமூகம் தாங்கும் உணர்ச்சி, போன்ற பல நன்மைகள் கிடைக்கலாம்.

**திறந்த வியாபாரம்**
திறந்த வியாபாரத்தை ஆராய்தல் இன்னொரு மாற்று வழி. பொது விளம்பரங்களையும் தனியார் நிறுவனங்களையும் உபயோகிக்க வேண்டும். சுப்பர் மார்க்கெட்டுகள் , சலவை நிலையங்கள், நூல் நிலையங்கள் போன்ற பொது இடங்களைக் கவனிக்கவும். உங்கள் சிநேகிதர்களையும் அவதானிக்கச் சொல்லவும்.

வீடமைப்புகள் விளம்பரம் செய்யப்படும் முக்கிய இடம் செய்தித்தாள். தரம் பிரிக்கப்பட்ட விளம்பரப் பகுதிகளை குளோப் அன்ட் மெயில் (ரென்றல்ஸ்) ரொரொன்ரோ ஸ்ரார் (ரென்றல்ஸ்) ரொரொன்ரோ சண் (வோர் ரொன்ற்) மற்றும் ஸ்காபரோ மிரர் (கவுஸஸ் போர் ரென்ற்) போன்ற பத்திரிகைகளில் கவனிக்கவும். பிரசுரிக்கப்படும் ஒவ்வொரு நாளிலும் குடியிருப்புப் பகுதிகள் பட்டியலிடப்படும். சிலர் புதனிலிருந்து சனிவரை புதிய பட்டியல்கள் வெளிவருவதால் கவனித்தல் சிறந்ததென்று கூறுவர். என் ஓ டபிள்யூ சஞ்சிகை மற்றும் சுயமொழிப் பத்திரிகைகளையும் முயற்சிக்கவும்.
மெற்றோ ரொரொன்றோவின் ஒரு கட்டணத்திற்கு (கிட்டத்தட்ட **$60**) இல்லங்கள் தேடும் சேவை நிறுவனங்கள் உள. கவனமாக இருக்கவும். இவை உங்களுக்காகக் கஷ்டப்பட்டுத் தேடுவதில்லை. அவை மேலதிக பட்டியல் உங்களுக்குத் தருபவை.

**தொடங்குவது எப்படி?**

நீங்கள் இடம் தேடுவது விடுதியாயிருப்பினும் கூட்டுறவாயினும் தொலைபேசி உங்கள் நேரத்தைச் சேமிக்கும். முதலில் என்ன கிடைக்கும் என்பதைக் கண்டறியுங்கள்.

நீங்கள் தேடுவது அதுவன்றில் நேரத்தை வீணாக்காதீர்கள். உதாரணத்திற்கு மானியம் பெறும் இடங்களில், பிள்ளைகளுள்ள தனிப்பெற்றோருக்கு முன்னுரிமை வழங்கப்டும் இடங்களில், நீங்கள் பிள்ளைகளுடன், ஆண் துணையுடன் வசிப்பவராயின் உங்களுக்கு அவ்விடயங்கள் கிடைக்காமற் போகலாம். (அரசு உதவித்திட்டங்களில் மாத்திரம் இவ்வாறு முன்னுரிமை வழங்கப்படலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். வீட்டுரிமையாளர் இவ்வாறு உங்களைப் பாகுபடுத்த முடியாது. உங்கள் உரிமைகளை மனித உரிமைக் கோட்பாடுகளில் பக்கம் 17ல் பாருங்கள்)

இரண்டாவதாக உங்களுக்கு விருப்பமாகவும், நீங்கள் தகுதியுள்ளவராகவுமிருப்பின் விண்ணப்பிக்க, செய்ய வேண்டியதைத் திட்டமாக அறிந்து கொள்ளவும். விண்ணப்பப் பாரம் எங்கு எடுப்பது? நீங்கள் நேரில் விண்ணப்பிக்க வேண்டுமா? எந்தெந்த பத்திரங்கள் உங்களுடன் கொண்டு வர வேண்டும்? எல்லாவற்றையும் எழுதிக் கொள்ளுங்கள்.

செய்தித்தாளில் பார்த்த விளம்பரத்திற்காக தொடர்பு கொண்டிருந்தால் அது இன்னமும் காலியாக உளதா? என விசாரியுங்கள். (நீங்கள் தொடர்பு கொள்ள முன்பே நிறையப் பகுதிகள் வாடகைககுக்கொடுக்கப்பட்டு விடும். கைவிடவேண்டாம்). காலியாக இருந்தால், செலவு, அளவு, பாடசாலைகளின் அண்மை, பொருட்கள் கொள்வனவு வசதி, வாகன வசதி போன்ற உங்களுக்கு முன்கியமான மற்ற விபரங்களை அறியவும்.

<u>எல்லாவற்றையும் எழுதிக் கொள்ளவும்</u>

தகுந்ததாகத் தோன்றின் அதனைப் பார்வையிடக் கேட்கவும். மரியாதையாக ஆனால் உறுதியாக இருக்கவும். அப்பகுதி முதல் தகுந்த வாடகையாளருக்குக் கொடுக்கபடலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் அதனைக்கூடிய சீக்கிரம் பார்வையிட வற்புறுத்துங்கள்.

<u>குறிப்பிட்டுக் கவனித்தல்</u>

வாடகை மானியம் பெறும் வீடமைப்புகளில் ஓர்இடம் காலியாகும் வரை காத்திருக்க வேண்டியதுதான். தேர்வுக்கு இடம் இல்லை. இடங்களைப் பொறுத்து முன்னுரிமை வழங்கப்படலாம். ஆனால் அதற்கு உத்தரவாதம் இல்லை.

திறந்த வியாபார வீடமைப்புகளில் நீங்கள் கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். விலையை மட்டும் கருத்தில் கொள்ள வேண்டாம். பகுதியைப் பார்வையிடும்போது கவனமாகப் பார்த்து கேள்விகள் கேட்கவும். நீங்கள் சில நிமிடங்களில் அப் பகுதியை ஏற்றுக் கொள்வதா நிராகரிப்பதா என முடிவு செய்ய வேண்டியிருக்கலாம். நீங்கள் இயலுமானவரை விபரங்களை அறிந்திருக்க வேண்டும்.

மனதில் வைத்திருக்க வேண்டிய சில:

நீங்கள் பின்வருவனவற்றைக் குடிபுகும் முதல்நாள் செலுத்தவேண்டியிருக்கும்.

– முதலாவதும் கடைசிமாதத்தைய வாடகை

– பாவனைக்கட்டணம்(முதல்மாதம் – முந்தையவருடக்குறிப்பிடும்படியாக குளிர்கால மாதங்களின் பற்றுச்சீட்டுக்களைப் பார்கக் வேண்டும் எனக் கேட்கவும்)

– விண்ணப்பக் கட்டணம்(சட்டரீதியானது. ஆனால் மேலதிகமான தொகை செலுத்த வேண்டாம்)

X ("திறப்பு வைப்பு"அல்லது "பாதிப்பு வைப்பு" ஒன்றாரியோவில் சட்ட ரீதியானதல்ல)

www.padippakam.com

## பார்க்க வேண்டியவை

– ( ) பாதுகாப்பான கதவின் திறவுகோல் (போதிய பாதுகாப்பு)
–( ) காற்றோட்டம் (ஜன்னல்கள் எளிதாகத் திறக்கக் கூடியதாகவும், இறுக்கமாகப் பூட்டக் கூடியதாகவும் இருக்க வேண்டும்)
–( ) சுத்தம் (கரப்பான், எலி ஆகியவை உளதா என்று கேட்கவும்)
– ( ) முற்றாக தொழிற்படக் கூடிய பகுதி : மின் அடுப்பு, குளிர்சாதனப் பெட்டி, குழாய்கள், கழிவறை, குளியலறை போன்றவற்றைப் பரிசீலித்து, அனைத்தும் வேலை செய்கிறது எனக் கண்டு கொள்ளவும்.
–( ) கூரையில் கறைகள் அல்லது வெடிப்பு உள்ளதா எனக் கவனிக்கவும் (குழாயில் கசிவு இருப்பதைக் குறிக்கலாம்)

* *நீங்கள் ஏதாவது உடைந்திருப்பதைக் கவனிக்காவிடினும் அனைத்து பழுதுபார்க்கும் வேலைகளுக்கு வீட்டுஉரிமையாளரே பொறுப்பாளி என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள்.

## கேளுங்கள் :

–( ) மேலதிக சத்தம் உள்ளதா?
–( ) வீதிகளில் வெளிச்சம் உண்டா?
–( ) அண்மையில் உள்ள வசதிகள் எவை(சலவை, மளிகை, பாடசாலை, வாகனம்)
–( ) வீட்டு உரிமையாளர் அக்கட்டிடத்தில் அண்மையில் வசிக்க அல்லது விற்க முனைவாரா?

எல்லாவற்றையும் எழுதிக் கொள்ளுங்கள்.
முடிந்தால், சொன்னவற்றிற்குச் சாட்சியாக ஒரு சிநேகிதரை அழைத்துச் செல்லவும்.

## பத்திரங்கள்

வசிப்பதற்கு ஒரு இடம் கிடைப்பது அவ்வளவு சுலபமானதல்ல. முடிந்தவரை ஒழுங்குபடுத்தியிருங்கள். ஒரு கோவையையோ, புத்தகமோ, உறையோ உங்களுக்கென வைத்து எல்லாவற்றையும் பதியுங்கள். உங்கள் விபரங்களை ஒன்றாக வையுங்கள்

இதுபோன்ற ஒன்றை அனுமானியுங்கள்.

| திகதி | தொடர்பு பெயர் | தொலை பேசி எண் | நிறுவனம் விலாசம் | என்ன சொன்னார்கள் | பின்பற்று |
|---|---|---|---|---|---|
| ஒக்டோபர் 12 | ஏ.உத்தியோகத்தர் | 928 4810 | எம்.ரி.எச்.ஏ | – விண்ணப்பபாரத்தை நிரப்புங்கள்<br>– எனக்கு முன்னுரிமை இருப்பின் நான்கு வாரத்தில் தொடர்பு கொள்வர் | நவம். 12 வரை ஒன்றும் கேள்விப்படா விட்டால் தொடர்பு கொள்க |
| ஒக்டோபர் 13 | பி. வீட்டு உரிமையாளர் | 555 5551 | 1. இல்ல வீதி | – 2 படுக்கை அறை பகுதி<br>– பாடசாலை சலவை ஸ்தானத்திற்குப் பக்கத்தில்<br>– சவ்வேயிலிருந்து 10 நிமிடம்<br>– ஒக்டோபர் 14 2.00க்கு நியமனம் | |

## உங்கள் உரிமைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்

வாடகையாளர்களுக்கு உரிமைகள் உண்டு. அநேகருக்கு தங்கள் உரிமைகள் தெரியாது. எங்கள் பாதுகாப்புக்கு உபயோகிக்கும் பொழுதுதான் சட்டங்கள் பயன்படும். பின்வரும் காரணங்களுக்காக உங்களுக்கு ஒரு பகுதியை வாடகைக்குக் கொடுக்க யாராவது மறுப்பது ஒன்ராரியோவின் சட்டத்திற்கு மாறுபட்டது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

– கார்ப்பவதி அல்லது பிள்ளைகள் உள்ளவர் (பெரியவர்களுக்கு மட்டும் பகுதிகள் இப்போது அனுமதிக்கப்படுவதில்லை)
– நீங்கள் சமூகநல அல்லது அரசாங்க உதவி பெறுபவர்.
– நீங்கள் மன அல்லது உடல் பாதிப்புள்ளவர்.
– நீங்கள் தனியே வசிப்பவர், விலக்கு அல்லது விவாகரத்துப் பெற்றவர், அல்லது ஒருவருடன் சேர்ந்து வாழ்பவர்.
– நீங்கள் 16 அல்லது 17 வயதுள்ள, பெற்றோரைப் பிரிந்து வாழ்பவர்.

அல்லாவிடின் உங்கள்
– சாதி
– பால்
– நிறம்
– எந்நாட்டைச் சேர்ந்தவர்
– மதம்
– புணர்ச்சித் தன்மை (அதாவது இரு ஆண்பால் சேர்க்கை அல்லது பெண்பால் சேர்க்கை)
– வயது

(ஒன்ராரியோ மனித உரிமை கோட்பாடு பகுதி **2 (1)**ம் **2 (2)**ம் ) ஆனால் ஒன்ராரியோ மனித உரிமை கோட்பாடு, சட்டத்திற்கு மாறானது என்று கூறுவதனால் மட்டும் பாகுபாடு நடைபெறாது என அர்த்தமாகாது.

<u>நீங்கள் வாடகையாளரின் உரிமைகளை வலியுறுத்த வேண்டும்.</u> எப்படி?
நீங்கள் பாகுபடுத்தப்படின் உடனே நடவடிக்கை எடுங்கள். அப்பகுதி வேறு ஒருவருக்குப் போகுமுன்னர். தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.

சி.இ.ஆர்.ஏ (தங்குமிட சம உரிமை நிலையம்)
**517** கொலிஜ் வீதி **#408** ரொரொன்ரோ .................................................. **944 0087**
குடியிருப்புப் பாகுபாட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் துன்புறுத்தப் பட்டவர்களுக்கும் சி.இ.ஆர்.ஏ விபரங்களும் உதவியும் வழங்கும். தனிப்பெற்றோர், சமூகநல உதவி பெறுபவர்கள், இளமையானோர், ஊனமுற்றோர் மற்றும் சிறுபான்மை நிறத்தவர்களின் பிரத்தியேகத் தேவைகளைக் கவனிப்பர். எந்தக் காரணத்திற்காகவாவது பாகுபடுத்தப்பட்டதாக நீங்கள் கருதினால் அல்லது அசாதாரணமாகத் தோன்றினால்கூட சி.இ.ஆர்.ஏயிடம் உங்கள் நிலையைக்கூறுங்கள்.மனித உரிமை கோட்பாட்டின் கீழ் உள்ள உரிமைகள் மீறப்பட்டிருந்தால் நடவடிக்கை எடுக்க சி.இ.ஆர். ஏ உதவி செய்யும்.

மனித உரிமை ஆணைச்சபை(எச்.ஆர்.சி)
**400** யூனிவேர்சிட்டி அவென்யூ **12**வது மாடி .................................................. **314 4500**
உங்கள் உரிமைகள் ஒன்ராரியோ மனித உரிமை கோட்பாட்டினால் பாதுகாக்கப்பட்டுள்ளன. அவ்வுரிமைகளைவலியுறுத்துவது ஆணைச்சபையின் வேலை. நீங்கள் பாகுபடுத்தப்பட்டதாகக் கருதினால் எச்.ஆர்.சி. உடன் தொடர்பு கொண்டு முறைப்படி குற்றச்சாட்டு அமைக்கலாம். உங்கள் குற்றச் சாட்டு செல்லுபடியாகுமெனில் அவர்கள் அதைஆராய்ந்து ஆவன செய்வர்.

## சட்ட ஆலோசனை

உங்களுக்கு சட்ட ஆலோசனை வேண்டுமெனக் கருதினால் பின்வரும் சேவைகள் அல்லது தொலைபேசிப் புத்தகத்தில் சட்ட உதவியில் குறிப்பிட்ட நிரை ஒன்றுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

மெற்றோ வாடகையாளர் சட்டச் சேவைகள் ........................................ **926 9693**

திங்களிலிருந்து வெள்ளிவரை **9.00 - 8.30** மணிவரை. பணமற்ற தொலைபேசி சட்ட ஆலோசனை. தொடர்ந்து முயற்சியுங்கள்.

ஸ்காபரோ சமூக சட்டசேவைகள் ........................................ **438 7182**

பணமற்ற தொலைபேசி ஆலோசனை திங்கள் – வெள்ளி **9.30-12.00** மணிவரை

ஏஜின்கோட் சமூக சேவைகள் இணைப்புச்சபை ........................................ **321 6912**

நியமனத்திறக்கு தொடர்பு கொள்ளவும் அல்லது வியாழன் இரவு **7.00- 9.00** வரை நேரில் வரவும்.

மேலும் முயற்சியுங்கள்:

மெற்றோ வாடகையாளரின் இணைப்புச் சபையின்
கட்டுப்பாட்டுச் சங்கம் (எவ்.எம். ரி) ........................................ **921 9494**

இக்கட்டுப்பாட்டுச் சங்கத்தின் முக்கிய வேலைகளில் ஒன்று, வாடகையாளர் குழு அவர்களின் இணைப்புச் சபை அமைக்க உதவுதல். வாடகையாளர் இணைப்புச்சபைகள், வாடகையளர் ஒருமித்து வாடகை ஏற்றங்களை எதிர்கக்வும், பாதுகாப்பு பராமரிப்பு போன்றவற்றின் சிந்தனையைப்பகிர்ந்து கொள்ளவும் உரிமையாளர் சட்டப்படி நடக்கின்றாரா எனக் கவனிக்கவும் உதவும். உங்கள் கட்டடத்தில் ஒன்று அமைப்பதற்கு **921 9494** உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

எவ்.எம்.ரி. ஏ வாடகை மாற்றம், பராமரிப்பு, வெளியேற்றல் ஆகியவற்றில் பணமற்ற தொலைபேசி ஆலோசனை திங்களிலிருந்து வெள்ளிவரை **12.00 - 7.00** மணிவரை வழங்கும்.

மகளிர் சட்டக் கல்வி மற்றும் செய்கை நிதி
(எல். இ. ஏ. எவ்) ........................................ **963 9654**

உங்கள் வழக்கு ஒரு மேற்கோள் போன்று அமையுமெனில் எல்.இ.ஏ.எவ் ஐத் தொடர்பு கொள்ளுங்கள்.

மேற்கோள் வழக்கு சட்டத்தை நாங்கள் உபயோகிக்கும் விதத்திலிருந்து மாறுபட்ட அல்லது சட்டத்தின் அடிமட்டத்தை ஆராயும் ஒன்றாகும். உதாரணத்திற்கு ஒரு பெண் கொண்டோமினியம் கம்பெனி ஒன்றை மேற்கோள் வழக்கிற்கு எடுத்துச் செல்ல முயற்சிக்கிறார் என வைத்துக் கொள்வோம். அப்பெண்மணிக்கு ஒரு மகன் இருப்பதால் அந்தக் கொண்டோமினியத்தை வாங்க முகாமை விடவில்லை. அப்பெண்மணியும் எல்.இ.ஏ.எவ்.ம் அவ்வழக்கு விரிந்து **1986**ம் தீர்மானத்தின்படி பெரியவர்களுக்கு மட்டும் பகுதிகள் சட்டமற்றது என்பதை வலியுறுத்தும்.

எம். ரி. எச். ஏ ........................................ **969 6010**

எம்.ரி.எச்.ஏ. வீடமைப்பில் தொல்லை வருமெனில் அவர்களுடன் அதை நிவர்த்தி செய்து கொள்ளலாம். அந்தக் கட்டிட முகாமையாளருடன் நீங்கள் முதலில் தொடர்பு கொள்ள வேண்டுமென்று அவர்கள் கூறுகின்றார்கள். (அவரின் பெயர் **969-6376** இலிருந்து பெற்றுக் கொள்ளலாம்) அ.்து பயனளிக்காவிடின் வட்ட முகாமையாளர் அல்லது ' செய்கை ' களுடன் தொடர்பு கொள்க. உங்கள் குற்றச்சாட்டு சாதித் தொடர்புள்ளதாயின் **969-6142** உடன் தொடர்புகொள்க.

www.padippakam.com

## தொல்லைகளின் ஆரம்பம்

வசிப்பதற்கு ஒரு இடம் தேடுவது கடினமானது. சில சமயங்களில் அது மற்றப் பிரச்சனைகளினால் முடியாததொன்றாகத் தோன்றலாம். உங்களுக்கு உதவக்கூடிய நிறுவனங்கள் உள. சில கீழே தரப்பட்டுள்ளன. உங்கள் பிரச்சனை இங்கு குறிப்பிடப்படாவிடின் சமூகத் தகவல் நிலையத்துடன் **392-0505** உடன் தொடர்பு கொண்டு உங்களுக்கு உதவக் கூடிய குழு ஏதாவது உளதா எனக் கேளுங்கள்.

### A . மொழிப் பிரச்சனை

சில நேரங்களில் ' அரசாங்க ' மொழிபுரிந்துகொள்ளக் கடினமாகலாம். நாங்கள் உங்கள் மொழியில் பேசமுடியாவிட்டால் பின்வரும் குழுக்கள் அரச மொழியில் உள்ள பத்திரங்களை மொழிபெயர்க்கவோ, உங்களுக்காக உங்கள் வார்த்தைகளை மொழி பெயர்க்கவோ உதவும்.

சீன மொழி பெயர்ப்பாளர் மற்றும் தகவல் சேவைகள் .......... **598 2022**
(கண்டோனீஸ் மண்டரீன் தாய் வுண் )

ஒன்ராறியோ நல்வரவு வீடு ஒருங்கியங்குதல்......................... **965 9902**
(சீனம்(கண்டோனீஸ், வூசின், மண்டரீன் ரியூசோ) பிரஞ்சு, குஜராத்தி, ஹிந்தி, இற்றாலியன், கார்ச்சி, பஞ்சாபி, ஸ்பானிஸ், தகெல்ல், உருது, வியட்னாமீஸ், மேற்கிந்திய பாஷைகள்)

முஸ்லீம் சமூக தகவல் மற்றும் குடிவரவாளர் உதவி.............. **766 6311**
(அரபிக், பார்சி, ஹிந்தி, பஞ்சாபி, உருது)

ரிவர்டேல் குடிவரவாளர் மகளிர் நிலையம் ............................ **465 6021**
(சீனம், (கண்டோனீஸ் மண்டரீன்) குஜராத்தி, ஹிந்தி, உருது)

தென்ஆசிய குடும்ப ஆதரவு சேவை .........................................**281 5469**
(ஹிந்தி, பஞ்சாபி, தமிழ்)

### B . உங்கள் பிள்ளைகளும் வீடற்ற நிலையும்.

பிள்ளைகளுக்கு உதவும் சமூகத்திற்கு (சீ ஏ எஸ்) பிள்ளைகளுக்கு உதவுவதுதான் வேலை. ஒரு பிள்ளையை அதன் குறிப்பிடத்தக்க ஆபத்து நிலையிலிருந்து காப்பாற்ற அது முயற்சிக்கும். வீடற்ற ஒரு தாய்க்கு அல்லது மோசமாக வீட்டு நிலையில் வசிக்கும் தாய்க்கு ஏற்படக்கூடிய ஒரு பிரச்சனை, அத்தாயின் பிள்ளை ஆபத்து நிலைக்கு உட்படுத்தப்படலாம். ஆனால் இது அனைவருக்கும் ஏற்படுவதில்லை.

சீ.ஏ.எஸ். பிள்ளைகள், குடும்ப அங்கத்தினர், காவல்துறையினர், பாடசாலை அதிகாரிகள், முதலியோர் அப்பிள்ளை ஏதாவது ஆபத்தில் இருப்பதாகக் கருதினால் அதற்குச் செவிசாய்க்கும். சீ.ஏ.எஸ். அப்பிள்ளையின் வீட்டுக்கு வந்து நிலைமையை ஆராயும். அப்பிள்ளை பெற்றோரின் அனுமதியின்றி பிரிக்கப்பட்டால் **5** நாட்களுக்குள் வழக்கும் பதிவாகும். (குடும்ப நீதிமன்றம் **1911** எக்லிங்ரன் அவென்யு கிழக்கு) நீதிமன்றத்தில் பெற்றோர் தன்னால் / தங்களால் அப்பிள்ளையைப் பாதுகாக்க முடியும் என நிரூபிக்க வேண்டும். அந்நிலையில் உள்ள பெற்றோர் உடனடியாக "சட்ட உதவி" பெற வேண்டும்.


படிப்பகம்

www.padippakam.com

முடிவுரை

உங்கள் வசிப்பிடத் தேடுதலில் நல்லதிஷ்டம் உண்டாகட்டும். அனேகமானோர் இறுதியில், வசிப்பதற்கு ஒரு இடம் கண்டு பிடிப்பர். நீங்களும் அப்படியே. கண்டு பிடித்ததும் நீங்கள் பட்ட கஷ்டத்தையும் ஆயிரம் பேர்கள் இப்போதும் படும் கஷ்டத்தையும் நீங்கள் பிரதிபலிக்கக் கூடும். சில சமயங்களில் அரசாங்கங்கள் வசிப்பிடம் போன்ற நம் அடிப்படைத் தேவைகளுக்கு நாம் படும் கஷ்டங்களை விளங்கிக் கொள்வதில்லை. புரிந்து கொண்டால் அடிப்படைத் தேவையான வசிப்பிடத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்படும். இக் கஷ்டங்களைத் தெரிந்து கொண்ட நாம் எங்கள் கருத்துக்களைத் தெரியப்படுத்த வேண்டும்.

உங்களுக்கு ஏதாவது சக்தி மீதமிருந்தால் அதைப் பின் வரும் குழுக்களுக்கு கொடுத்துதவலாம்.

மெற்றோ வாடகையாளர் இணைப்புச்சபையின்
கட்டுப்பாட்டுச் சங்கம் .............................................. 921 9494

ஸ்காபரோ மகளிர் செய்கை ஒருங்கியக்குதல் ................ 431 1138
ஸ்காபரோ வசிப்பிட வேலைக்குழு ................................ 267 9146

தகவல் ஸ்காபரோ ........................................................ 321 6912
ஸ்காபரோ பரிதவிப்பு நிலையம் .................................. 751 4888
ஸ்காபரோ ஜெனரல் ஆஸ்பத்திரி .................................. 431 8135
ஸ்காபரோ மகளிர் நிலையம் ........................................ 431 1138
மெற்றோ பொலிட்டன் ரொரொன்ரோ சமூகசேவைகள் இலாகா
அவசரத் தேவைகள் (உணவு, நலம், மருந்து) ................ 392 8600